Y24,31'996 N96612

1996 ஜூலை 25] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

30 நிமிஷம். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்தது 7 மணி நேரம். மற்ற நேரம் எல்லாம் எதிர்க்கட்சிகளுக்கு கொடுக்கப்பட்டது என்று அறிவிக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-7-1996) காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

29. வேப்ப விதைக்கு சேலம் மாவட்டத்தை அறிவிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3-11-1995-ஆம் நாளிட்ட 576-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).]

30. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

31. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

32. 1994-95 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டத்தின் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

23. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் இணைப்பு - 'உ'-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் "வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகத்தினை" சேர்ப்பது குறித்து 15-7-1996 ஆம் நாளிட்ட சட்டமன்றப் பேரவைச் செயலகக் கடித எண்.24092/95-1, தநாசமபே (சமுவ-3)-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

213487